வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 8/2022

வழக்கு சாட்சி LW4 / PW2

| பெயர் | மீனாட்சி | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | சாது | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 45 |

தேதி 10.12.2024

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் பொன்னியம்மன்மேட்டில் வசித்து வருகிறேன். எனக்கு அ.சா.1 யை தெரியும். எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1 எனது மச்சினன். தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. மாலை 5 மணியளவில் செல்வராஜ் போன் செய்து தன்னை ஒருவர் தண்ணீர்அடிக்க காசு கேட்டு கொடுக்காததால் அடித்துவிட்டதாக கூறினார். உடனே நானும், அவருடைய மகளாகிய கவிதாவும், பொன்னியம்மன்மேட்டிற்கு சென்றோம். தலையில், முகம், கையில் காயமாக இருந்தது. கேவிடி மருத்துவமனை அழைத்து சென்றோம். பின்னர் மாதவரம் காவல்நிலையம் சென்று புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். யார் செல்வராஜை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். செல்வராஜ் எனது மச்சினன் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். செல்வராஜ் எனது மச்சினன் என்பதால் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**